மடத்துக்குளம், வாளவாடி, உடுக்கம்பாளையம், சின்னபூப்பஞ்சாலை, பாப்பவளம், கொடுங்கியம், மலையாண்டிபட்டிணம் ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பசுமை வீடுகள் திட்டத்தின் மூலமாக நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். நெசவாளர்கள் அதிகமாக உள்ள அப்பகுதிகளில் அரசு மூலமாக வழங்கக்கூடிய மின் மோட்டார்கள் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம், மானிய விலையில் நூல் போன்றவற்றை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது. திரும்பவும் அவர்களுக்கு அரிய வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 417, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

417—

தரம் உயர்த்துதல்

***4036—திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சி, அண்ணா சாலையிலுள்ள அறிஞர் அண்ணா ஆண்கள் நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, செங்கல்பட்டு நகராட்சி, அண்ணா சாலையில் உள்ள அறிஞர் அண்ணா ஆண்கள் நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனவே, வரும் கல்வியாண்டுகளில்

2014 ஆகஸ்ட் 12]

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் து. முருகேசன் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 418, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

418—

சூரிய மின்வேலி

***20675—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகம், ஊடேதுர்க்கம் காப்புக் காடு பகுதிகளில் சூரிய மின்வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகத்திற்குட்பட்ட ஊடேதுர்க்கம் காப்புக் காடு பகுதிகளில் ரூ.40 இலட்சம் செலவில் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டு, தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.